**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 4

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Thiru.GANPATH LALVANI |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.

**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW 4** Thiru.GANPATH LALVANI

**முதல் விசாரணை**

நான் சென்னையில் குடியிருக்கிறேன். நான் சித்தி வினாயாக கம்பெனியில் டிவிசினல் மேனேஜராக பணிபுரிந்தேன். தற்போது கம்பெனி மூடப்பட்டது. சித்தி வினாயாக கம்பெனியில் வேலை செய்யும் போது எங்களுடைய ஏரிய மேனேஜர் சுபாஸ் மாலா 03.09.2014 இரவு 11.00 மணிக்கு எனக்கு ஏரியா மேனேஜர் சுபாஸ் மாலா போன் செய்தார். ஒரு வண்டி டாடா டிரெய்லர் வண்டி தூத்துக்குடியில் இருந்து லோடாகி சோசா ஸ்டெர்லைட் சில்வாசா குஜராத்திற்கு சென்றதாகவும் அந்த வண்டியில் ஜிபிஎஸ் வேலை செய்யவில்லை என்றும் சொன்னார். அந்த வண்டியின் எண். எம்.எச்.04 எப் யூ 6952 ஆகும். அந்த வண்டிக்கு ஜிபிஎஸ் வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் மறுநாள் போன் செய்து கேட்கலாம் என்று சொன்னேன். பின்பு மறுநாள் லேட் நைட் போன் செய்து டிரைவர் மொபைலை எடுக்கவில்லை என்றும் வண்டி கடத்தப்பட்டது என்றும் சொன்னார். டிரைவர் மாற்றிவிட்டு வண்டியை எடுத்து சென்றுவிட்டார்கள் என்று சொன்னார். வண்டி எஸ்.ஆர்.எம். போலிஸ் ராமாபுரம் அருகில் இருப்பதாக சொன்னார்கள். அந்த இடத்தில் இருப்பது ஜிபிஎஸ் மூலம் தெரிந்தது. விடியற்காலை 07.00 மணியளிவல் வள்ளுவர் சாலை அருகே சென்று பார்த்தபோது ஒரு scrap yardல் வண்டி இருந்தது. நாங்கள் வேறு ஏதும் கேட்காமல் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். அது ராயலா நகர் காவல் நிலையம். அந்த வண்டியில் காப்பர் 24 டன் இருந்தது,. அதன் மதிப்பு ரூபாய் 1 கோடியே 20 லட்சம் ஆகும். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**6 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

காப்பர் பொருட்களுக்கான மதிப்பிற்கான பில் ஏதும் போலிசாரிடம் கொடுத்தேன். அதில் இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் குறிப்பிட்ட டிரைலர் லாரியின் ஜிபிஎஸ் பொருத்தப்பட்டதற்கான பில் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பணிபுரியும் கம்பெனி லாரியின் உரிமையாளர் ஆகும். பொருட்களின் உரிமையாளர் அல்ல. ஸ்டெர்லைட் கம்பெனி காப்பர் பொருட்களின் உரிமையாளர். டிரைலர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் காவல்

நிலையத்தில் கொடுத்திருக்கிறனே். அது இன்று நீதிமன்றத்தில் எனக்கு காண்பிக்கப்படவில்லை. மகாராஸ்டிராவில் பதிவு செய்யப்பட்ட வாகனம் என்பதால் மகாராஸ்டிரா ஆர்.டி.ஒ விடம் வாகனத்தின் பதிவை உறுதி செய்யும் வகையில் ஆவணங்கள் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ஸ்டெர்லைட் கம்பெனியில் இருந்து சென்னை வருவதற்கு எத்தனை டோல்கேட்டை தாண்டி வரவேண்டும் என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் வாகனம் குறிப்பிட்ட டோல்கேட்டினை தாண்டி வருவதற்கான ரசீதோ அல்லது சிசிடிவி புட்டேஜோ காண்பித்தார்களா என்றால் இல்லை. ஸ்டெர்லைட் கம்பெனியில் இருந்து வெளியே வாகனம் எடுத்து வந்ததற்கான அவுட் கேட் பாஸ் என்னிடம் காண்பித்தர்களா என்று எனக்கு நியாபகம் இல்லை, நிதிமன்றத்தில் அவ்வாறு ஆவணம் ஏதும் காண்பிக்கப்படவில்லை. வாகனத்தின் டிரிப் சீட் என்னிடம் காண்பிக்கப்படவில்லை. டிரிப் சீட் இல்லாமல் வாகனத்தை எடுக்க முடியாது என்றால் சரிதான், டிரிப் சீட் ஓட்டுநரிடம் இருக்கும். வள்ளுவர் சாலையில் எஸ்ஆர்எம் காவல் நிலையம் அருகில் ஸ்கேர்ப் வாகனம் இருந்தது அதில் எந்த scarp yard என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. ஜிபிஎஸ் மூலம் வாகனம் காண்பிக்கும் பொருட்டு அதன் சாப்ட்வேர் காபி போலிசாரிடம் கொடுத்தேன் அதை நீதிமன்றத்தில் காண்பிக்கவில்லை. வாகனத்தின் காப்பீடு விபரங்கள் எனக்கு தெரியாது. ஸ்டெர்லைட் கம்பெனியில் இருந்து எந்த சரக்கையும் எங்கள் வாகனத்தில் ஏற்கவில்லை என்றாலும் காப்பீடு மோசடி செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வண்டியில் சொன்ன இடத்தில் பார்த்ததாக உண்மைக்கு புறம்பாக போலிசார் சொன்னதின் பேரில் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**3,4,7மற்றும் 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் ஆ.சா.1 சுபாஸ் என்பவரும் கம்பெனியின் மேலாளார்களாக இருந்தோம் என்றால் சரிதான். முதன் முதலில் வண்டி காணமால் போன விபரத்தை சுபாஸ் என்னிடம் சொன்னார். சுபாஸ் என்பவர் செல்லும் வரை வண்டியின் நிலவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். குஜராத்தில் இருந்து தூத்துக்குடி சென்ற வண்டியில் ஜிபிஎஸ் வழித்தடம் குறித்த விபரங்கள் எனக்கு தெரியாது. 03ம் தேதியில் இருந்து வண்டியின் ஜிபிஎஸ் எப்போதிலிருந்து செயல்படவில்லை என்றும்

எவ்வளவு மணி நேரம் செயல்படவில்லை என்று போலிஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை, சுபாஸ் என்பவர் சொல்லி தான் வண்டி ராமாபுரத்தில் இருப்பது தெரிந்து கொண்டோன். 03ம் தேதி க்கு மேல் ஜிபிஎஸ் வேலை செய்யவில்லை என்று நான் கூறியிருந்தால் அது சரியல்ல. வண்டியின் ஜிபிஎஸ் கண்காணிக்கும் அதிகாரம் எனக்கு இல்லை. சுபாஸ் என்னிடத்தில் கூறிய விபரத்தை தான் நான் போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். வண்டியை பார்த்ததையும் போலிஸ் விசாரனையில் சொன்னேன் என்று சாட்சி முன் வந்து கூறுகிறார். ஓட்டுநர் சவுகத்அலி கான் என்பரை சம்பவத்திற்கு பின்பு ஒரு மாதம் கழித்து அலுவலகத்தில் வைத்து பார்த்தேன். காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு நானும் சுபாஸ், மகாலால் மட்டும தான் போயிருந்தோம். எனக்கு தமிழ் எழுத தெரியாது ஓரளவுக்கு படிக்க தெரியும். இந்த வழக்கை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்றாலும் போலிசார் கூறியதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>10 மற்றும் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3, 4, 7 மற்றும் 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

03ம் தேதிக்கு முன்பாக ஓட்டுநர் சவுகத் அலிகானை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். மாதாவரம் சித்தி விநாயகா கம்பெனியில் சுமார் 4, 5 பேர் வேலை செய்கிறார்கள். 05ம் தேதி எத்தனை மணிக்கு வாகனத்தை சென்று வாகனத்தை பார்த்தேன் என்றால் காலை 07.00 மணிக்கு சென்று பார்த்தேன். ராய்லா நகர் காவல் நிலையத்திற்கு 07.30 மணிக்கு சென்றிருப்பேன். நானும் சுபாஸ் மட்டும் தான் காவல் நிலையம் போனேம் எங்களுடம் வேறு யாரும் வரவில்லை. இந்த வழக்கை சம்மந்தமாக சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்கள். 20 நாட்களுக்கு பின்பு 25ம் தேதி விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து ஏதும் வாங்கவில்லை. என்னை வாய் மொழியாக விசாரித்தார்கள். மாதாவரம் அலுவலகத்திற்கு ராயல் நகர் காவலர்களோ, சிபிசிஐடி போலிசாரோ நேரடியாக சென்று விசாரனை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் சூலையில் இருக்கும் அலுவலகத்தில் தான் இருப்பேன். சுபாஸ் என்பவருக்கு எத்தனை மணிக்கு வண்டி இருக்கும் இடம் தெரியவந்தது என்பது எனக்கு தெரியாது. அந்த விபரத்தை அவர் என்னிடம் சொல்லவில்லை என்றால்

சரிதான். புகார் கொடுத்த பின்பு எத்தனை மணிக்கு வாகனம் காவல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது என்பது எனக்கு தெரியாது. வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ள பொருட்களின் விபரம் பற்றி எனக்கு சம்பவத்திற்கு முன்பாகவே தெரியும். 03ம் தேதி இரவு அன்று வண்டியில் ஏற்றப்பட்ட பொருட்களின் விபரம் தெரியவந்தது, அதை போலிசாரிடம் சொன்னேன். நான் சொல்வது பொய் என்றாலும் எந்த விபரமும் போலிசாரிடம் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்றாலும் கம்பெனியில் கூறியவாறு நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**1 மற்றும் 5ம் தரப்பு வழக்கு எதிரிகள் குறுக்கு விசாரணை**

வழக்கு விசாரணைக்கு தேதி குறிப்பிட்டு ஒத்தி வைக்கப்பட்ட போதிலும் 1 மற்றும் 5ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எதிரிகளுக்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் முன் வரவில்லை.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 5

Court I Additional District Court, Tiruvallur.

Name : Thiru. முருகன்
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.



**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 5 Thiru.Murugan

**முதல் விசாரணை**

நான் தூத்துக்குடியில் இருக்கும் சோசா ஸ்டெர்லைட் நிறுவனத்தில் associate logistic ல் வேலை செய்கிறேன். 2008 மார்ச் லிருந்து அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து

வருகிறேன், தற்போதும் அதே நிறுவனத்தில் வேலை செய்கிறேன். அப்போதைய மாத சம்பளம் ரூ.20000/- மேற்படி நிறுவனத்தில் டிரான்ஸ்போர்ட் சூப்பர்வைசர் வண்டி எண், அளவு மற்றும் எந்த இடத்திற்கு செல்கிறது என்று விபரங்களை குறிப்பிட்டு என்னிடம் கொடுப்பார்கள். அதன் பின்பு நான் என்னுடைய சாப்ட்வேரில் loading advise-ன் வாகனத்தின் எண், கொள்ளளவு மற்றும் எங்கே செல்கிறது என்ற விபரங்களை பூர்த்தி செய்து அதில் எனது கையொப்பம் செய்து சூப்பர்வைசரிடம் கொடுத்து விடுவேன். அவர் வெளியே நிற்கும் வண்டியை உள்ளே கொண்டு வருவார். அதன் பின்பு வண்டியை போட்டு லோடிங் பாய்ண்டிற்கு அனுப்பி விடுவேன். பின்பு லோடிங் ஏற்றி வந்த பிறகு இரண்டாம் எடை போட்டு பில்லிங் செய்து சூப்பர்வைசரிடம் கொடுத்து விடுவேன். அதன் பிறகு டிரக் வெளியே செல்லும். 02.09.2014 அன்று காலை 06.00 மணிக்கு பணிக்கு வந்தேன் சுமார் 06.30 மணியளவில் எஸ்.வி.எல்.எல். சூப்பர்வைசர் அவருடைய போடிங் அட்வைசர் வாகன எண், கொள்ளளவு மற்றும் போகும் இடம் ஆகியவற்றை குறிப்பிட்டு என்னிடம் கொடுத்தார்கள், அதன் பின்பு நான் லோடிங் அட்வைஸ் தயாரித்து சூப்பர்வைசரிடம் கொடுப்பேன். அதன் பிறகு வெளியே உள்ள வண்டி உள்ளே வந்து எம்டி எடை போட்டு லோடிங் பாண்டிற்கு சென்றது. அந்த வாகனம் எஸ்.வி.எல்.எல் க்கு சொந்தமான எம்.எச்.04 எப்.யூ 6952 ஆகும். அதன் பின்பு லோடு ஏற்றி வந்த பிறகு லோடுடன் எடை போட்டு அதன் பிறகு இன்வாய்ஸ் தயார் செய்து சூப்பர்வைசரிடம் கொடுத்துவிடுவேன். அதன் பின்பு 03.09.2014 அன்று வண்டி திருட்டு போனதாக தெரிந்து கொண்டேன். அதன் பிறகு 05.12,2014 அன்று சிபிசிஐடி அலுவலகம் வந்தேன், அப்போது வாகனத்தின் புகைப்படைத்து என்னிடம் காண்பித்து லோடு ஏற்றிய வண்டி இதுதான என்று காண்பித்தார்கள் நான் அதை பார்த்து ஆமாம் என்று சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது நான் தயார் செய்த இன்வாய்ஸ் ஆகும். அதில் காப்பர் annode 24.012 டன் என்று குறிப்பிட்டுள்ளேன், அது ஏற்கனவே ஆ.சா.3 ஆக குறியீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் நான் தாயரித்த இன்வாய்ஸ் ஆகும். அதன் இன்வாய்ஸ் எண்.3287 ஆகும். அது ஆ.சா.அ.5 ஆகும். அதில் மொத்தம் 64 பீசஸ் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகைப்படங்கள் மேற்படி வாகனத்தின் புகைப்படங்கள் ஆகும். அந்த யடினைந களின் ஓரங்களில் பு ளூ, வெள்ளை மற்றும் ஆரஞ்ச பெய்ண்ட் அடிக்கப்பட்டுள்ளது. அந்த புகைப்படங்கள் ஏற்கனவே சா.பே.2 வரிசையாக குறியீடு செய்யப்பட்டது. (மேற்படி புகைப்படங்க ளுக்கான குறுந்தகடு இருந்தும் சாட்சிய சட்டம் 65பீ ன் படி சான்று வழங்கப்படவில்லை என்று 6 மற்றும் 9ம் எதிரி தரப்பு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது, அந்த ஆட்சேபனை குறித்து இறுதி விசாரணையில் முடிவு செய்யப்படும்.) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**6 மற்றும் 9ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ஸ்டெர்லைட் ஆலையம் மூடப்பட்டது என்றால் சரிதான். நான் அங்கு இருக்கும் குடியிருப்பில் தற்போது வேலை செய்து வருகிறேன். என்னிடம் ஆ.சா.ஆ.3 ஆவணம் ஒளி நகல் என்றால் சரிதான் அதில் எனது பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆ.சா.ஆ.3ல் எங்களது கம்பெனியல் முத்திரை இல்லை என்றால் சரிதான். ஆ.சா.ஆ.3 ஆவணத்தின் அசல் செக்யூரிட்டி டிபார்மெண்டில் இருக்கும். ஆ.சா.ஆ.5ல் இன்வாய்சில் எத்தனை பிரதிகள் எடுக்கப்படும் எனக்கு நியாபகம் இல்லை. ஆ,சா.ஆ.5 ல் எனது கையொப்பம் உள்ளது. ஆ.சா.ஆ.5ல் 1 கோடியே 40 லட்சம் என்று மதிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மதிப்பிற்கு மொத்தம் எத்தனை பொருட்கள் இருக்க வேண்டும் என்று என்னால் தற்போது சொல்ல இயலவில்லை. பி.ஓ நம்பர் இருந்தால் தான் சரக்கை ஏற்ற முடியும் என்றால் சரிதான். அந்த பி.ஓ நம்பருக்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் காண்பிக்கவில்லை. ஆ.சா.ஆ.3ல் வாகனம் காலியாக இருக்கும் எடை 10.690 டன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆ.சா.ஆ.5ல் எங்கள் கம்பெனியின் முத்திரை இல்லை என்றால் சரிதான். ஆ.,சா.ஆ.5ல் மற்ற நகல்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆ.சா.ஆ.5 நகல் என்னிடம் பராமரிக்கப்படும் நகல் அல்ல. ஆனால் எங்களிடம் அந்த நகல் உள்ளது. சிபிசிஐடி போலிஸாரும், ராயால நகர் போலிசாரும் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். ஆ,.சா.ஆ.5 ஆவணம் கணினியல் தயாாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் உண்மை தன்மை நிருபிக்கும் பொருட்டு சான்றுகள் கொடுக்க்ப்படவில்லை என்றால் சரிதான். இது சம்மந்தமாக போலிசார் என்னிடம் குறுந்தகடு ஏதும் வாங்கவில்லை என்றால் சரிதான். ஆ.சா.ஆ,5ல் ஓட்டுநரின் கையொப்பம் இல்லை. ஆ.சா.ஆ.,5ல் ஏற்றப்பட்ட சரக்கில் புளூ, வெள்ளை, ஆரஞ்ச பெய்ண்ட் அடிக்கப்பட்டதாக கூறவில்லை என்றால் சரிதான். சான்று பொருள் இரண்டு வரிசையில் இருக்கும் புகைப்படங்களில் நீல நிற கோடுகள் தென்படவில்லை என்றாலும் அது ஏற்றும் போது அடி பட்டது தான் தெரிகிறது என்றாலும் சரியல்ல. எங்கள் கம்பெனியில் இருந்து copper anoding மாதிரிகள் போலிசார் கைப்பற்றினார்களா என்றால் கைப்பற்றவில்லை. சாட்சி அதன் பின்பு அந்த விபரம் தெரியாது என்று கூறுகிறார். கைப்பற்றப்பட்ட பொருள் காப்பர் தானா என்பதை கண்டறியும் பொருட்டு எங்கள் கம்பெனியில் சோதனை ஏதும் செய்ய சொன்னார்களா என்றால் இல்லை. 02.09.2014 அன்று மொத்தம் எத்தனை வாகனம் எங்கள் கம்பெனிக்கு வந்து சென்றது என்ற விபரங்களை போலிசார் என்னிடம் கேட்கவில்லை. போலிஸ் விசாரணையின் போது “Raman Road Ways” என டைப் சைய்ததை “Raman

Road Ways" என்று இருந்ததை பேப்பரில் கோடு போட்டுவிட்டு எஸ்.வி.எல்.எல் என்று எழுதி எனது சைனை அந்த அட்வைஸ் காப்பியில் போட்டு சூப்பர்வைசரிடம் கொடுத்தேன் என்று கூறியுள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். சா.போ.2 வரிசையில் இருக்கும் புகைப்படத்தில் வாகனம் இருக்கும் இடம் சித்தி விநாயகா logistics என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த புகைப்படங்களை சிபிசிஐடி அலுவலகத்தில் என்னிடம் காண்பித்தார்கள். நான் சா.பொ.2 வரிசையில் உள்ள புகைப்படங்களை சிபிசிஐடி அலுவலகத்தில் பார்க்க கூடிய வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட பொருட்கள் சேசா ஸ்டெர்லைட்டிற்கு சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. எனக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் தவறுதான். நான் இந்த ஆவணங்கள் எல்லாம் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்தது என்றாலும் சரியல்ல.

**<u>3, 4, 7 மற்றும் 10 முதல் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

6 மற்றும் 9 தரப்பு எதிரிகள் குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

02.09.2014 அன்று நடந்த சம்பவத்தை குறித்து 05.12.2014 ல் தான் சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதற்கு முன்பு எந்த போலிசாரும் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் கம்பெனியில் வருகை பதிவேடு பராமரிக்கப்படுகிறது. 02.09.2014ம் தேதி அன்று நான் பணியில் இருப்பதை காண்பிக்கும் வகையில் எங்கள் கம்பெனியின் வருகை பதிவேடை போலிசார் கைப்பற்றவில்லை.

**<u>1 மற்றும் 5ம் தரப்பு வழக்கு எதிரிகள் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு விசாரணைக்கு தேதி குறிப்பிட்டு ஒத்தி வைக்கப்பட்ட போதிலும் 1 மற்றும் 5ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எதிரிகளுக்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் முன் வரவில்லை.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 6

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Prakash

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.

..2..

**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 6 Tr.Prakash

**முதல் விசாரணை**

நான் சேசா ஸ்டெர்லைட் கம்பெனில் செக்யூரிட்டி ஆபிசராக பணிபுரிந்து வருகிறேன். நான் எம்.காம் வரை படித்துள்ளேன். என்னுடைய வேலை கம்பெனிக்குள் வரும் வாகனங்கள் காலியாக உள்ளதை ஆய்வு செய்து, அந்த வாகனத்தை கம்பெனிக்குள் லோடிங் செய்வதற்கு அனுமதிப்பது எனது பணியாகும். 04.04.2013ம் தேதியில் இருந்து நான் செக்யூரிட்டி ஆபிசராக பணிபுரிகிறேன்., என்னுடைய சம்பளம் 25,000. 02.09.2014ம் தேதி ஏ சிப்டில் (காலை 06.00 மணி முதல் மதியம் 02.00 மணி வரை) மெட்டிரியல் கேட்டில் பணியில் இருந்தேன். நான் பணியில் இருந்த போது எஸ்.வி.எல்.எல். கம்பெனியில் இருந்து எம்.எச்.04 எப்.யூ.6952 என்ற வண்டியை உள்ளே அனுமதித்தேன். அது வே பிரிட்ஜ் சென்று விட்டு லோடிங் பாய்ண்டிற்கு மெட்டிரியல் ஏற்றுவதற்கு அனுப்பினேன். லோடிங் செய்த பின்பு அந்த வண்டி மீண்டும் மெட்டிரியல் கேட்டிற்கு வந்தது. அந்த வண்டியில் இருக்கும் மெட்டிரியலை பரிசோதித்து அதில் கையொப்பம் செய்வது எனது பணியாகும். அதில் anode copper material 8 க்கு 8 அளவு கொண்ட 64 எண்ணிக்கை தகடுகள் இருந்தது. நான் பரிசோதித்து கையொப்பம் செய்து logistic department இருக்கும் முருகனுக்கு இன்வாய்ஸ்

அடிக்க அனுப்பி விட்டேன். அதன் பின்பு இன்வாய்ஸ் உடன் வந்தார்கள். இன்வாய்ஸ் எண்.3287 ஆகும். அந்த இன்வாய்சை நான் மீண்டும் சரிபார்த்து விட்டு அதன் மொத்த எடை 24.012 மெட்ரிக் டன் சரிபார்த்தேன். அதன் மதிப்பு 1 கோடியே 20 லட்சம் இருக்கும். அதன் பிறகு வண்டி காணாமல் போன தகவல் கம்பெனியில் இருந்து எனக்கு தெரியபடுத்தினார்கள். சிபிசிஐடி சென்னை அலுவலகத்தில் என்னை விசாரித்தார்கள். இன்வாய்ஸ் எண்ணில் கையொப்பம் செய்தேனா என்று என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆ.,சா.ஆ.5 vehicle out என்று குறிப்பிட்டு நான் கையொப்பம் செய்து அதில் தேதியும் குறிப்பிட்டு இருக்கிறேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>6 மற்றும் 9 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஆ.சா.ஆ.5 முன்பக்கத்தில் என் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். ஆ.சா.ஆ.5ல் பின்பக்கத்தில் காவல் நிலையத்தில் வைத்து தான் என் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரிதான். ஆ.சா.ஆ.5 வாகனத்திற்கு கொடுக்கப்படும் பிரதியாகும். அந்த பிரதியில் மட்டும் தான் நான் கையொப்பம் செய்தேன். ஆ.சா.ஆ,5 மெட்டிரியல் கேட்டில் இருந்த போது தான் கையொப்பம் செய்தேன் என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான், நேரம் குறிப்பிட்டு நான் என் கையொப்பத்தில் எழுதவில்லை என்றால் சரிதான். ஆனால் நான் கையொப்பம் செய்த பின்பு தான் அதில் முத்திரை போடப்படும். அந்த முத்திரையில் செக்யூரிட்டி சைன் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அது நான் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தப்பட்ட பொருள் சேசா ஸ்டெர்லைட்டில் இருந்து எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 02.09.2014 அன்று பணியில் இருந்தேன் என்பதை காண்பிக்கும் பொருட்டு வருகை பதிவேடு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். சிசிடிவி கம்பெனியில் உள்ளது, ஆனால் வெளியில் இருந்து வரும் வாகனங்களை கண்காணிப்பதற்கு சிசிடிவி இல்லை. லோடிங் செய்யும் இடத்தில் சிசிடிவி உள்ளது. லாரியின் டிரிப் சீட்டில் நான் கையொப்பம் செய்யவில்லை.

3, 4, 7, மற்றும் 10 முதல் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

6 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**1 மற்றும் 5ம் தரப்பு வழக்கு எதிரிகள் குறுக்கு விசாரணை**

வழக்கு விசாரணைக்கு தேதி குறிப்பிட்டு ஒத்தி வைக்கப்பட்ட போதிலும் 1 மற்றும் 5ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எதிரிகளுக்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் முன் வரவில்லை.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 7

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Naveen
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.

**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 7 Tr.Naveen

**முதல் விசாரணை**

நான் தூத்துக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் சேசா ஸ்டெர்லைட் நிறுவனத்தில் வேலை செய்து கொண்டு இருக்கிறேன். நான் சீனியர் procees controller ஆக production department ல் வேலை செய்து வருகிறேன். அப்போது எனது மாத சம்பளம் 25000/- நான் B.Sc. Physics படித்துள்ளேன். எங்கள் நிறுவனத்தில் வெளிநாட்டில் இருந்து கொள்முதல் செய்யப்படும் மண்ணிலருந்து processing செய்து anode copper தகடுகளாக மாற்றி அதை சில்வாசாவில் இருக்கும் எங்கள் நிறுவனத்தில் defining செய்து cathode copper தகடுகளாக மாற்றுவோம். எனது பணி anode copper தகடுகளை சில்வாசவில் இருக்கும் எங்கள் நிறுவனத்திற்கு வாகனங்கள் மூலமான அனுப்பி வைப்பது தான். 02.09.2014 அன்று logistic department ல் இருந்து சரிபாாத்து அனுப்பப்படும் வாகனத்தில் system update செய்து அதற்குரிய கொள்ளளவு anode தகடுகளை ஏற்றினேன். சத்தி விநாயகா logistics ல் இருந்து எம்.எச்.04 எப்யூ 6592 என்ற வண்டியில் 8 பண்டில்கள் வீதம் ஒவ்வொரு பண்டிலிலும் 8 யடேனந தகடுகள் மொத்தம் 64 தகடுகள் மொத்த கொள்ளளவு 24.012 மெட்ரிக் டன் எடை உள்ள தகடுகளை ஏற்றி maneetou அந்த வாகனத்தின் மூலம் ஏற்றி எடை போடுவதற்காக வே பிரிட்சிற்கு அனுப்பி வைத்தேன்., அந்த anode தகடுகளின் இடது காது முனையில் நீலம், வெள்ளை, ஆரஞ்ச் பெய்ண்டால் கோடு போடப்பட்டிருக்கும். 8 பண்டில்களில் ஒவ்வொரு பண்டிலின் எடை 2994, 2998, 3010, 3044, 2980 என்ற அளவில் இருந்தது. இதன் மொத்த எடை 24.012 மெட்ரிக் டன் ஆகும். வாகனம் இரண்டாம் எடை போடுவதற்கு வே பிரிட்ஜ் சென்று விட்டு அதன் பின்பு செக்யூரிட்டியால் சரிபார்க்கப்பட்டு வாகனம் வெளியல் சென்றது. அதன் பின்பு 10.12.2014 அன்று வாகனம் திருடு போய்விட்டதாகவும், திருடியவர்களை கண்டுபிடிப்பதாற்காகவும் அதன் விசாரணைக்காக சிபிசிஐடி போலிசார் விசாரணைக்காக

அழைத்திருந்தார்கள். அங்கு அவர்கள் காட்டிய போட்டை ஆல்பத்தை வைத்து அது எங்கள் நிறுவனத்தின் பொருட்கள் தான் என்று அடையாளம் காட்டினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**6 மற்றும் 9 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

02.09.2014ம் தேதி எங்கள் கம்பெனியில் copper anode களின் மொத்த stock எவ்வளவு இருந்தது என்பதை காண்பிக்கும் stock register ஐ போலிசார் கைப்பற்றினார்களா என்று எனக்கு நியாபகம் இல்லை. copper anode களில் என்ன நிறம் அடிப்பது என்று எங்கள் நிறுவனத்திற்கு standard operative procedure உள்ளது. அதை நீநிமன்றத்தில் காண்பித்தார்களா என்றால் இல்லை. 2014ல் என்ன நிறம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த எஸ்.ஓ.பி நகலை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஒவ்வொரு copper anode களின் தனிப்பட்ட எடை மற்றும் பரப்பளவு போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஒரு நாளில் பல வண்டிகள் கம்பெனிக்குள் வந்து செல்லும். அதற்கான தனிப்பட்ட பதிவேடு பராமாரிக்கப்படுகிறது. அவ்வாறு பதிவேடுகள் ஏதும் நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்பட்வில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான் கூறியுள்ள வாகனம் கம்பெனிக்கு வரவில்லை என்றாலும், அதனால் தான் அந்த பதிவேட்டை காண்பிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கில் சம்மந்தப்பட்ட தகடுகள் எங்கள் நிறுவனத்தின் தகடுகள் இல்லை என்றாலும், அதனால் தான் அந்த தகடுகளை ரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. மாதிரி தகடை எங்கள் நிறுவனத்தில் இருந்து கொடுக்கப்படாததற்கு காரணமே வழக்கு பொருட்கள் எங்கள் நிறுவனத்தின் பொருட்கள் அல்ல என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3, 4, 7 மற்றும் 10 முதல் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரனை**

**6 மற்றும் 9 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுகொள்ளப்படுகிறது.**

**1 மற்றும் 5ம் தரப்பு வழக்கு எதிரிகள் குறுக்கு விசாரணை**

வழக்கு விசாரணைக்கு தேதி குறிப்பிட்டு ஒத்தி வைக்கப்பட்ட போதிலும் 1 மற்றும் 5ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எதிரிகளுக்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் முன் வரவில்லை.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 8

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Ragulan
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.

**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 8 Tr.Ragulan

**முதல் விசாரணை**

நான் தருமபுரி மாவட்டத்தில் அருரில் குடியிருக்கிறேன். எனது தகப்பனார் பெயர் வீராசாமி நான் என் குடும்பத்துடன் அருரில் வசித்து வருகிறேன், நான் பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் அருரில் ஏ.டீ.எம்.வீ லாட்ஜ் அருகில் உள்ள கார் ஸ்டேன்டில் வண்டி எண்.டி.எண்.31 பி ஒய். 3159 டாடா சுமோ வெள்ளை கலர் வாகனத்தை ஓட்டி கொண்டிருந்தேன். 01.09.2014 அன்று காலை 08.00 மணிக்கு எங்கள் ஸ்டேண்டில் வண்டி வைத்திருக்கும் சிவக்குமார் என்பவர் தனது வண்டிக்கு வாடகை உள்ளது என்றும், மதுரைக்கு பெண் பார்க்க செல்வதற்காக வாகனம் ஒன்றை கேட்டிருக்கிறார்கள் என்று சொன்னார். நான் வாகனத்தை எடுத்து கொண்டு அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி பேருந்து நிறுத்தத்திற்கு 09.00 மணிக்கு போனேன். அங்கு நான் போனவுடன் சிவகுமாரும், லட்சுமணன் என்ற டிரைவரும் இருந்தார். லட்சுமணன் என்பவர் அருரில் ஏற்கனவே டிரைவராக ஓட்டுவார் எல்லா வண்டியும் மாற்றி மாற்றி ஓட்டுவார். சிவகுமார் என்பவர் தனது வாகனத்தை லட்சுமணன் திருப்பதிக்கு டிரிப் எடுத்து சென்று வந்ததாகவும் அவர் டிரைவர் தான் என்பதால் என்னை வண்டியை கொடுத்து விடு என்றும் பெண் பார்க்க தான் செல்கிறார்கள் என்றும் அவர் சொன்னார். 01ம் தேதி காலையில் 09 மணிக்கு மேல் வாகனத்தை எடுத்து சென்றார்கள்,. 02ம் தேதி வாகனத்திற்காக நான் சிவகுமாருக்கு போன் செய்தேன். சிவகுமார் லட்சுமணனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது வேலை முடியவில்லை என்று கூறியுள்ளார். 03ம் தேதி இரவு 07.30 மணிக்கு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி பேருந்து நிலையத்தில் வைத்து வாகனத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டார். வண்டிற்கான வாடகை பணத்தை என்னிடம் கொடுக்கவில்லை, பணம் கேட்டதற்கு பின்பு தருவதாக கூறினார். பின்பு 17.09.2014 இரவு 02.30 மணிக்கு தொப்பூர் காவல் நிலையத்தில் இருந்து என் வீட்டிற்கு போலிசார் வந்தார்கள். அவர்கள் வந்து என் வாகனத்தையும் என்னையும் கூட்டிக்கொண்டு அருர் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தார்கள். அதன் பின்பு லட்சுமணன் டிரைவரையும் கையத் பாசா என்பரையும் பிடித்து கொண்டு வந்தார்கள். அவர்கள் வந்த பின்பு விசாரனை செய்தார்கள். copper தகடுகளை

திருடுவதற்காக எனது வாகனத்தை பயன்படுத்தியதாகவும் அதனால் வாகனத்தை கைப்பற்றுவதாகவும் போலிசார் என்னிடம் கூறினார்கள். மறுநாள் காலை நான் தொப்பூர் காவல் நிலையத்திறகு போனேன். அப்போது வண்டி ராயலா காவல் நிலையத்திற்கு சென்றுள்ளது என்றும் அங்கே செல்லுமாறும் சொன்னார்கள். 05.10.2014 அன்று சிபிசிஐடி போலிஸ் சென்னையில் இருந்து அருர் வந்தார்கள். என் வீட்டிற்கு வந்து என்னை விசாரனை செய்தார்கள். பின்பு என்னிடம் வாக்குமூலும் வாங்கினார்கள். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஆவணம் என் வாகனத்தின் ஆர்.சி புக்கின் நகல் ஆகும். அதன் அசல் பைனான்ஸ் கம்பெனியல் உள்ளது. ஆர்.சி..புக்கின் நகல் ஆ.சா.ஆ.6 ஆகும். வாகனத்தின் டீ.ஓ பார்ம் ஆ.சா.ஆ.7 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**6, 8, 9, 10 மற்றும் 12எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

**3, 4, 7, 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வாகனம் இன்று நீதிமன்றத்தில் இல்லை. வாகனத்தின் புகைப்படம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படவில்லை. போலிசார் என்னிடம் கைரேகை ஏதும் வாங்கவில்லை. நான் வைத்துள்ள வாகனம் டிபோர்டு வாகனம் என்றால் சரிதான். எனது வண்டியின் டிரிப் சீட் விபரங்கள் போலிசார் கேட்டு வாங்கவில்லை. டிரிப் சீட்டை பராமரிக்கும் பழக்கம் உள்ளது. 17.09.2014 முதல் 05.10.2014 தேதி வரை போலிசார் என்னிடம் எந்த வாக்குமூலம் ஏதும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எனது வண்டி குற்ற வழக்கில் ஈடுபட்டுள்ளது என்று போலிசார் கூறிதான் எனக்கு தெரியும். போலிசார் சொன்னதின் பேரில் தான் நான் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 03.09.2014ம் தேதி வண்டியை எத்தனை மணிக்கு ஒப்படைத்தர்கள் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். இரவில் தான் ஒப்படைத்தார்கள். அன்றைய கால கட்டத்தில் வாகனத்தை லட்சமணன் என்பவரிடம் ஒப்படைத்ததை டிரிப் சீட்டில் எழுதி வைத்திருந்தேன் என்றால் சரிதான். போலிசாரிடம் டிரிப் சீட்டை நான் ஒப்படைக்கவில்லை, அவர்களும் அதை கேட்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்து தான் கையத் பாசா மற்றும் லட்சமணனையும் நான் பார்த்தேன் என்றால் சரிதான். நான் வாகனத்தை சிவகுமார் என்வரிடம் தான் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. அப்போது லட்சமணனும் இருந்தார். வண்டி என்னிடம் ஒப்படைக்கப்படும் போது வண்டியின் முன் பக்கம் மற்றும் பின் பக்க கண்ணாடிகளில் எந்த வித மாற்றமும் இல்லை என்றால் சரிதான். எனது வண்டியில் ஏதேனும் பொருள் ஒட்டி எடுக்கப்பட்டதற்கான தடயம் இல்லை என்றால் சரிதான். சுத்தமாக கழுவியிருந்தது. என்னிடம் சொன்னது போல் லட்சமணன் என்பவர் பெண்

பார்க்க செல்வதற்காக தான் வாகனத்தை எடுத்து சென்றால் என்றாலும் அவர் எந்த விதமான குற்ற சம்பத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் போலிசார் சொன்னதின் பேரில் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் டிரான்ஸ்போர்ட் வாகனம் வைத்திருப்பதால் போலிசாருக்கு பவ்யபட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 9

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Sivakumar
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.



**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 9 Tr.Sivakumar

**முதல் விசாரணை**

நான் தருமபுரி மாவட்டத்தில் அருரில் பெரியர் நகரில் குடியிருக்கிறேன். எனது தகப்பனார் பெயர் ராமகிருஸ்னன். நான் குடும்பத்தோடு குடியிருந்து வருகிறேன். நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் எதிரிகளில் ஐந்தாவதாக நிற்க கூடிய எதிரி லட்சுமணன் என்பவரை சாட்சி அடையாளம் காண்பித்துள்ளார். கண்ணன் என்பவர் மூலமாக திருப்பதிக்கு போக வேண்டும் என்று என்னுடைய வண்டியை வாடகைக்கு நான் கண்ணனிடம் டிரைவர் கேட்டேன். அவர் லட்சுமணனை காண்பித்தார். ஒரு முறை திருப்பதிக்கு குடும்பத்தோடு சென்று திரும்பி வந்துவிட்டார். சில நாடகள் பின்பு போன் மூலமாக வண்டி வேண்டும் என்று லட்சுமணன் கேட்டார். எதற்காக வண்டி வேண்டும் என்று கேட்டதற்கு மாமா வீட்டிற்கு பெண் பார்க்க செல்ல வேண்டும் என்று சொன்னார். அப்போது என்னிடம் வண்டி இல்லை. என்னுடைய வண்டி வேறு வாடகைக்காக சென்று இருந்தது. வண்டி அவசியமாக வேண்டுமா என்று நான் லட்சுமணனிடம் கேட்டேன். அப்போது ராகுலனிடம் வண்டி உள்ளதா என்று போன் மூலமாக கேட்டேன். அவர் வண்டி உள்ளது என்று சொன்னார் , நான் அவரை வண்டியை எடுத்து கொண்டு வா என்று சொன்னேன். அன்று தேதி 01.09.2014 காலை 09.00 மணிக்கு ராகுலனையும் லட்சுமணனையும் பேச வைத்தேன். வாடகை ரூ.6000 என்று பேசி மதுரைக்கு வண்டியை கொண்டு போவதாக சொன்னார். அந்த வாகனம் டாடா சுமோ பதிவுஎண் டி எண்.31 பி.ஒய்.3159. காலை 09.00 மணிக்கு வண்டியை எடுத்து சென்றார்கள், அன்றைய தினம் இரவு வாகனம் வரவில்லை, மறுநாள் மதியம் வரை பார்த்தோம் வண்டி வரவில்லை. போன் செய்து பார்த்தால் போன் நாட் ரீசபுலாக இருந்துது. 03ம் தேதி மதியம் 01.00 மணிக்கு ராகுலனும், நானும் சேர்ந்து போன் செய்தோம் அப்போது அவர் மாலை 07 அல்லது 08 மணிக்கு வந்து விடுவேன் என்று கூறினார். அதே போல் 07 மணிக்கு வண்டி கொண்டு வந்தார். வாடகை அப்புறம் தருகிறேன் என்று சொன்னார். அதன் பிறகு 17.09.2014ல் காலை 06.00 மணிக்கு தொப்பூர் போலிசார் நேரடியாக வந்து வீட்டில் என்னை விசாரித்தார்கள். அப்போது காவல் நிலையத்திறகு ராகுலன் டாடா சுமோ மற்றும் என்னையும் அழைத்து போனார்கள். விசாரனை செய்தார்கள். அப்போது லட்சமணனும் ஸ்டேசனில் ஜெயிலுக்குள் இருந்தார். விசாரணை முடிந்து என்னை அனுப்பி விட்டார்கள். டாடா சுமோ வாகனத்தை காவல் நிலையத்தில் வைத்துகொண்டார்கள். 05.10.2016 அன்று சிபிசிஐடி போலிசார் விசாரித்தார்கள், வாக்குமூலம் வாங்கினார்கள்.

6, 8, 9, 10 மற்றும் 12எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**3, 4, 7, 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொன்ன பதிவு எண் கொண்ட வாகனத்தையோ அல்லது வாகனத்தின் புகைப்படத்தையோ இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். 17.09.2014 தேதி முதல் 05.10.2014 வரை போலிசார் என்னிடம் எந்த வாக்குமூலம் வாங்கிவல்லை என்றால் சரிதான். 17.09.2014ம் தேதி போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்து விசாரனை செய்த போது கையத் பாசாவையும், லட்சுமணனையும் என் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையின் போது கையத் பாசா மற்றும் லட்சுமணனும் உடன் வந்தர்கள் என்று நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். 03.09.2014ம் தேதியில் இருந்து 17.09.2014 வரை டாடா சுமோ வாகனம் என் வீட்டில் இருந்தது என்றால் இல்லை, ராகுலன் வீட்டில் இருந்தது. ராகுலன் வீட்டில் இருந்து தான் வாகனத்தை கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். கையத் பாசா யார் என்று போலிசார் கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ராகுலன் என்னிடம் டிரிப் சீட் விபரங்கள் ஏதும் காண்பிக்கவில்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறிய இரண்டு நபர்களுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 10

Court I Additional District Court, Tiruvallur.

| | | |
|---|---|---|
| Name | : | Tmt.Chitra |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.



**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 10 Tmt.Chitra

**முதல் விசாரணை**

நான் தருமபுரி மாவட்டத்தில் அருரில் ஈ.பி.ஆபிஸ் எதிரில் குடியிருக்கிறேன். எனது கணவர் பெயர் கார்த்திகேயன் அவர் பெங்களூரில் எஸ்.ஆர்.எஸ்.டிராவல்சில் டிரைவராக

பணிபிரிந்து வருகிறார். எனது வீட்,டில் இண்டிகா காரை பைனான்ஸ போட்டு வாங்கினோம். அந்த வாகனத்தை வாடகைக்கு மார்க்கெட்டில் ஓட்டி வந்தோம். என் கணவர் வேலைக்கு போய்விட்டார். அப்போது லட்சுமணன் என்பவர் போன் செய்து வாகனம் வேண்டும் என்றும், மதுரைக்கு பெண் பார்க்க செல்ல வேண்டும் என்று என் கணவரிடம் கேட்டார்,. என் கணவர் இந்த தகவலை என்னிடம் சொன்னார். லட்சுமணம் வண்டி வேண்டும் சொன்னதாக கையத் பாசா என்பவர் வண்டியை எடுத்து சென்றார். 01.09.2014 அன்று வண்டியை எடுத்து சென்றார். அந்த வாகன எண். டி.எண்.29 ஏ.எக்ஸ்.1324, நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் எனது வாகனத்தின் ஆர்.சி.புக்., பர்மிட் மற்றும் மேக்மா பைனான்ஸ் ல் இருந்து பெறப்பட்ட கடிதம். ஆர்.சி.புக். ஆ,.சா.அ,8 ஆகும். டிரான்ஸ்போர்ட் பர்மிட் மற்றும் டேக்ஸ் கார்ட் ஆ,.சா,ஆ,9 ஆகும். மேக்மா பைனான்ஸில் இருந்து பெறப்பட்ட கடிதம் ஆ.சா.ஆ.10 ஆகும்.(மேற்படி அவணங்கள் அசல் மேக்மா பைனான்ஸ் கம்பெனியில் உள்ளதால் ஒளி நகல் தாக்கல் செய்யப்படுகிறது). 04.09.2014 அன்று தான் வாகனம் வந்தது, அதற்கிடையில் என் கணவர் பேன் செய்து பார்த்தால் போன் ரீச் ஆகவில்லை. 04ம் தேதி போன் எடுத்தார்கள் வண்டி உடனே வேண்டும் என்று நாங்கள் கேட்டோம்,. அன்றைய தேதி இரவு 08,00 மணிக்கு வாகனத்தை கொண்டு வந்து விட்டு விட்டார்கள். 17.09.2014 அன்று போலிஸ் விசாரணை வரும் வரை வாகனத்தை லாரி யை கடத்துவதற்கு பயன்படுத்திய விபரம் எனக்கு தெரியாது. 17.09.2014 அன்று இரவு 03.00 மணிக்கு வண்டியை போலிசார் எடுத்து கொண்டு போனார்கள். 05.10.20104 அன்று சிபிசிஐடி வந்தார்கள், அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் நிற்க கூடிய ஐந்தாவது நபரான எதிரி லட்சுமணன் என்பவர் தான் சாட்சி அடையாளம் காட்டினார். நீதிமன்றத்தில் ஒன்பதாவதாக நிற்க கூடிய எதிரி கையத் பாசா என்பவரை சாட்சி அடையாளம் காட்டினார். அவர் தான் வண்டியை எடுத்து சென்றதாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

6, 8, 9, 10 மற்றும் 12எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**3, 4, 7, 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கூறிய வாகனமோ அல்லது வாகனத்தின் புகைப்படமோ நீதிமன்றத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். வாகனத்தை புகைப்படம் எடுத்தார்கள். ஆ.சா.ஆ.8 ஆர்.சி.புக்கில் வண்டியின் நிறம் வெள்ளை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், என்னுடைய வாகனம் வெள்ளை நிறம் தான் என்றால் அது சில்வர் கலந்த வெள்ளை

போல் இருக்கும். என்னை போலிசார் 17.09.2014 அன்று விசாரித்தார்கள் அதன் பின்பு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் டிரிப் சீட் விபரங்கள் எனக்கு தெரியாது, என் கணவருக்கு தான் தெரியும். என் கணவர் வேறு நிறுவனத்தில் வேலை செய்வதால் நான் தான் அந்த வாகனத்தின் பராமரிப்பு வேலைகளை கவனித்து வந்தேனா என்றால் இல்லை, அதை என் கணவர் தான் கவனித்து வருகிறார். போலிசார் எப்போதாவது கையத் பாசாவையும், லட்சுமணனையும் என் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்றால் இல்லை. போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்து தான் வாகனத்தை எடுத்து கொண்டு போனார்கள். எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும், என் கணவர் கூறியதன் பேரில் வழக்கிற்காக பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. என்னிடம் போலிசார் கைரேகை ஏதும் வாங்கவில்லை.

**<u>IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR</u>**

**<u>SESSIONS CASE NO. 228/2018</u>**

Deposition of Witness for Prosecution

Defence PW 11

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tr.Karthikeyan
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.



**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 11 Tr.Karthikeyan

**முதல் விசாரணை**

நான் தருமபுரி மாவட்டத்தில் அருரில் குடியிருக்கிறேன். ஆ.சா.10 என்னுடைய மனைவி. நான் எஸ்.ஆர்.எஸ் டிராவல்சில் பெங்களூரில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக ஒரு இண்டிகா கார் வாங்கினேன் அதன் பதிவ எண். டி.என்.29 ஏ.எக்ஸ்.1324 ஆகும். அந்த வண்டியை வாடகைக்கு ஓட்டி வந்தோம். நான்

வெளியூரில் இருக்கும் போது என் ஊரை சேர்ந்த லட்சமணன் என்பவர் பெண் பார்க்க செல்ல வேண்டும் ஒரு நாளைக்கு வண்டி வேண்டும் என்று வாடகைக்கு எடுத்து சென்றார். 01.09.2014 ம் தேதி வண்டியை கொடுத்தோம். என்னிடம் வண்டியை கேட்டார், நான் அப்போது பெங்களூரில் இருந்ததால் என் மனைவியிடம் சொன்னேன். லட்சமணன் என்பவர் கையத் பாசா என்பவரை அனுப்பி வண்டியை எடுத்து சென்றார், அவரும் அதே ஊரை சேர்ந்தவர். வண்டி 3 நாட்களாக வரவில்லை. நான் தொலைபேசியில் கேட்டதற்கு வேலை முடியவில்லை என்று சொன்னார்கள். இல்லை வண்டி வாடகைக்கு விடவேண்டும் என்று நான் சொன்னேன். 04.09.2014 அன்று வண்டியை கொண்டுவந்து விட்டார்கள். 17ம் தேதி தொப்பூர் காவல் நிலையத்தில் இருந்து போலிசார் வந்தார்கள். அரூர் காவல் நிலையத்திற்கு வாகனத்தை எடுத்து வாங்கள் என்று சொன்னார். நான் அரூர் காவல் நிலையத்தில்சென்று வாகனத்தை நிறுத்தினேன். எதற்காக வாகனத்தை கேட்டீர்கள் என்று கேட்டேன். அப்போது என் வாகனத்தை எடுத்து கொண்டு போய் உடீநச ிடயவ களை திருடிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதன் பின்பு வண்டியை விடமாட்டேன் என்று சொல்லி சென்னைக்கு கொன்டு சென்று விட்டார்கள். 05.10.2014 சென்னை சிபிசிஐடி போலிஸ் எங்கள் வீட்டிற்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள். அதன் பின்பு வண்டியை என்னிடம் கொடுத்து விட்டார்கள். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

6, 8, 9, 10 மற்றும் 12எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**<u>3, 4, 7, 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் சொன்னதின் பேரில் நான் தான் வாகனத்தை காவல் நிலையம் சென்று ஒப்படைத்தேன் என்றால் சரிதான். கையத் பாசாவோ அல்லது லட்சமணனோ போலிசாருடன் வந்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். முதல் விசாரனையில் சொன்ன விபரங்களை தான் போலிஸ் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 17.09.2014 முதல் 05.10.20104 வரை போலிசார் என்னிடம் எந்த வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். வண்டியோ அல்லது வண்டியின் புகைப்படமோ நீதிமன்றத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் போலிசர் கைரேகை ஏதும் வாங்கிவல்லை. போலிசார் சொல்லி தான் கையத் பாசாவும், லட்சமணனும் குற்ற சம்பவங்களில் ஈடுபட்ட சம்பவம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு டிரிப் சீட் பராமரிக்கவில்லை. அது சம்மந்தப்பட்ட ஆவணங்கள் ஏதும் போலிசார் விசாரணையில் நான் கொடுக்கவில்லை. ஆ.சா.ஆ.8ல் ஆர்.சி.புக்கில் வாகனத்தின் நிறம் வெள்ளை என்று குறிப்பிடப்பட்டிருந்தால் சரிதான்.

வாகனத்தின் நிறம் வெள்ளை தான், ஆனால் பல நாட்கள் ஆனதால் அது சாம்பல் நிறம் போல் உள்ளது என்று சாட்சி தாமகவே முன் வந்து சொல்கிறார். போலிசார் கூறியதின் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக விபரங்கள் ஏதும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.